THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக**

கொலோசெயர் 3:16

## ஆகஸ்ட் 2004

ஆசிரியர்
B.அர்ஜுனன்

மரம் 4 ஆண்டு சந்தா ரூ.50/- கனி 9



**கரூர் மாவட்டத்தில் நடந்த பதினைந்தாவது வாசகர் கருத்தரங்கில் கலந்து கொண்ட கர்த்தருடைய ஊழியர்களும், கர்த்தருடைய ஜனங்களும்.**

## ஆசிரியர் கடிதம்

உங்கள் யாவருக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நீங்கள் தொடந்து இவ்விதழை பெற்று வருவீர்கள் என்று நம்புகிறோம். இவ்விதழை வேண்டாவெறுப்புமாக பெறுகிறவர்கள் இன்றே ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி தெரியப்படுத்துங்கள். கிறிஸ்துவின் வசனம் கிடைக்காதா! என்று ஏங்கிதவிக்கிற ஆத்துமாக்களுக்கு அதை அனுப்ப எங்களுக்கு வசதியாக இருக்கும். முகவரி மாறுகிறவர்கள் உங்களுடைய பதிவு எண் Ref.No.-யை தெரியப்படுத்தவும் அது உங்களுடைய முகவரியை கண்டுபிடிக்க வசதியாக இருக்கும்.

இந்த மாத இதழ் தேவைப்படுவோர் ஒரு அஞ்சல் அட்டையில் உங்களுடைய முவவரியை எழுதி (தான் புதிய வாசகர் என்று குறிப்பிட்டு) அனுப்புங்கள். ஆண்டு சந்தா Rs.50/- கொடுக்கக் கூடியவர்கள் கொடுத்து தாங்கலாம்,

இதுவரை தமிழகத்தில் பதினைந்து மாவட்டங்களில் வாசகர் கருத்தரங்கு நடத்த கர்த்தர் கிருபை செய்தார் அவருடைய நாமம் மகிமைப்பட்டது. பதினைந்து மாவட்டங்களிலும் அங்குள்ள கிறிஸ்துவின் சபையார் இக் கூட்டங்களை நடத்த ஒத்துழைப்பு கொடுத்தார்கள். இன்னும் மீதமுள்ள பதினைந்து மாவட்டங்களிலும் வாசகர் கருத்தரங்கு நடக்க ஜெபியுங்கள். தமிழகத்தை கிறிஸ்துவின் வசனத்தால் நிறைக்க முயற்சிக்கிறோம். தேவ ஆசீர்வாதம் அனைவருக்கும் கடந்து செல்ல ஒத்துழைப்பு தாருங்கள். தொடர்ந்து இவ்விதழை வெளியிட செய்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக!

ஆசிரியர்.

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் _ 4 ஆகஸ்டு 2004 கனி _ 9


# ஆறுதலின் தேவன்

## GOD OF COMFORT




ஆறுதல் இல்லாமல் அலைமோதும் மக்களை அநுதினமும் காண்கிறோம், மனிதனுக்கு ஆறுதல் சொல்ல ஒருவர் வேண்டும் இல்லையேல் அவனுடைய யோசனை அவனை மரணத்திற்கு கொண்டுபோய்விடும். எனக்கு யாரும் ஆறுதல் சொல்லத்தேவையில்லை என்று எவரும் சொல்லிவிட முடியாது. ஏனென்றால் மனிதன் ஒருவரையொருவர் சார்ந்தே வாழ வேண்டிய வனாயிருக்கிறான். ஆறுதலின் பிறப்பிடம் அன்பு. "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1யோவா.4:8) என பரிசுத்தவேதம் விளக்குகிறது. ஆண்டவர் ஒருவரையும் புறம்பே தள்ளுகிறதில்லை எல்லோருக்கும் ஆறுதல் செய்கிறவராயிருக்கிறார்.

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றி கேள்விப்பட்ட பெரும்பாடுள்ள ஸ்திரீ "நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக் கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்"(மத்.9:21). அவளுக்குத்தான் எத்தனை அதிகமான விசுவாசம் பாருங்கள்! பன்னிரண்டு வருஷமாக கஸ்டப்பட்ட அவள், தனக்கு ஆறுதல் கொடுக்கும் ஆண்டவர் இயேசு என்பதை தன் உள்ளத்தில் எண்ணி அவருடைய வஸ்திரத்தை தொட்டாலே போதும் என்று எண்ணினாள். இதை அறிந்த கர்த்தர் "அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம்முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள்"(மத்.9:2). இன்றைக்கு சுகம் கொடுக்கட்டும் பின்பு அந்த ஆண்டவரை பின்பற்றுவோம், அந்த தேவனை தொழுதுகொள்வோம் என்று சொல்லும் மக்கள் ஏராளம். ஆனால் வேதம் என்ன சொல்லுகிறது? "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்"(மத்.6:33).

இயேசு தேவாலயத்தை விட்டு அப்புறம் போகையில் பிறவிக் குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார் "அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப்பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்"(யோவா.9:2,3) என்றார். அநேகர் இப்படித்தான் சரீரத்தில் ஏதாவது ஒரு குறைபாடோடு இருந்தால் போதும் அதைப் பிடித்துக்கொண்டு அதனால்தான் நீ இப்படி பிறந்திருக்கிறாய் உன்னோட வம்சம் செய்த பாவம் உன்னை பிடிச்சு ஆட்டுது என்று வாய்க்கு வந்தபடி பேசுவார்கள். குறைபாடுள்ளவர்கள் தங்களில் இருக்கும் குறையை எண்ணி தேவனிடம் முறையிட்டுக் கொண்டிருப்பார்கள். இப்படி இருக்கக்கூடியவர்களுக்கு கர்த்தர் சொன்ன இந்த பதில் ஆறுதல் அளிக்கக்கூடியதாயிருக்கிறது.

ஒரு சமயம் உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயரில் சிலர் இயேசுவினிடத்தில் வந்து "போதகரே, ஒருவன் மனைவியையுடையவனாயிருந்து பிள்ளையில்லாமல் இறந்து போனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம்பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்க வேண்டும் என்று மோசே எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே. சகோதரர் ஏழுபேரிருந்தார்கள், அவர்களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம் பண்ணி, அவனும் பிள்ளையில்லாமல் இறந்து போனான், மூன்றாஞ்சகோதரனும் அவளை விவாகம் பண்ணினான். அப்படியே ஏழு பேரும் அவளை விவாகம்பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்து போனார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்து போனாள். இவ்விதமாய் ஏழுபேரும் அவளை விவாகம் பண்ணியிருக்க, உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள் என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும் பெண் கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண் கொள்வதுமில்லை பெண் கொடுப்பதுமில்லை அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பான வர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்"(லூக்.20:28-36) என்றார்.

இன்றைய சமுதாயம் பெண்களுக்கு குழந்தை இல்லை என்றால் அவளை மலடி என்று சொல்லி பட்டம் சூட்டிவிடுகிறது. ஆனால் அவளும் ஆபிரகாமின் குமாரத்தியே! வேதம் அவளைப் பார்த்து "அந்தப்படி பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்திரு; கர்ப்பவேதனைப்படாதவளே, களிப்பாய் எழும்பி ஆர்ப்பரி; புருஷனுள்ளவளைப்பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அதிக பிள்ளைகளுண்டு என்று எழுதியிருக்கிறது"(கலா.4:27). ஆண்டவரும் அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால்

தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப் பார்கள் என்று ஆறுதலின் வார்த்தைகளை கூறுகிறார். "என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது"(சங்.94:19) என்ற சங்கீதக்காரனுடைய வார்த்தையின் படியே ஆறுதல் அடைகிறார்கள்.

அநேக தேவதாசர்கள் தங்களுடைய ஜீவியநாட்களில் துன்பத்தை அநுபவித்திருக்கிறார்கள். அதில் குறிப்பாக யோபுவைப் பற்றி படிக்கிறோம். பிசாசு அவனை கொடிய பருக்களால் வாதித்தான் அப்பொழுது உருத்தெரியாமல் இருந்தான். அவனைப் பார்க்கவந்த மூன்று சகோதரர்கள் ஏழு நாள் அமைதியாக இருந்து துக்கித்து அவனைப்பார்த்து "உம்முடைய பொல்லாப்பு பெரியதும், உம்முடைய அக்கிரமங்கள் முடிவில்லாதவைகளுமாய் இருக்கிறதல்லவோ? முகாந்தரமில்லாமல் உம்முடைய சகோதரர்கையில் அடகுவாங்கி, ஏழைகளின் வஸ்திரங்களைப் பறித்துக் கொண்டீர். விடாய்த்தவனுக்குத் தாகத்துக்குத் தண்ணீர் கொடாமலும், பசித்தவனுக்கு போஜனம் கொடாமலும் போனீர்"(யோபு22:5-7) என்று சொல்லி அவன் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டே போனார்கள். அதற்கு யோபு "உபாதிக்கப்படுகிறவனுக்கு அவனுடைய சிநேகிதனால் தயை கிடைக்கவேண்டும்; அவனோ சர்வவல்லவருக்குப் பயப்படாதே போகிறான். என் சகோதரர் காட்டாறுபோல மோசம் பண்ணுகிறார்கள்; ஆறுகளின் வெள்ளத்தைப்போலக் கடந்து போகிறார்கள்"(யோபு6:14,15) மேலும் அவன் "அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்"(யோபு23:10) என்றான். "நீங்கள் வீணான ஆறுதலை எனக்குச் சொல்லுகிறது என்ன? உங்கள் மறுமொழிகளில் உண்மைக்கேடு இருக்கிறது என்றான்"(யோபு21:34). வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல அவர்களுடைய வார்த்தைகள் இருந்தது. இதைப் பார்த்த ஆறுதலின் தேவன் "கர்த்தர் தேமானியனாகிய எலிப்பாசை நோக்கி: உன் மேலும் உன் இரண்டு சிநேகிதர் மேலும் எனக்கு கோபம் மூளுகிறது; என் தாசனாகிய யோபு பேசினதுபோல், நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை"(யோபு42:7) என்றார்.

வேதாகமத்திலே பதினான்கு நிருபங்களை எழுதிய அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது எனக்கு ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது "என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னை விட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்"(2கொரி.12:7-9) என்கிறார். பாடுகள் பரிசுத்தவான்களுக்கு பல வழிகளில் வருகிறது. ஆனால் எல்லாவற்றி னின்றும் கர்த்தர் ஆறுதலைக் கொடுத்து விடுவிக்கிறவராயிருக்கிறார். "எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில்

பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது"(2கொரி.1:5). யோபுவைப் போலவும், பவுலைப் போலவும் ஒரு கிறிஸ்தவனுக்கு அவனுடைய பாடுகளின் வழியே குறைபாடு இருக்குமானால் அவன்செய்த பாவம் என்ற முடிவுக்கு வந்து அவனை தூற்றக்கூடாது. அந்த குறைபாடுகளிலும் அவன் மனரம்மியமாக இருந்து கொண்டு கர்த்தரைத் துதிப்பதை நினைத்து நாம் தேவனுக்கு நன்றி சொல்லி அப்படிப்பட்டவனுக்கு ஆறுதல் அளிக்கவேண்டும்.

லாமேக்கு, "கர்த்தர் சபித்த பூமியிலே நமக்கு உண்டானவேலையிலும், நம்முடைய கைகளின் பிரயாசத்திலும், இவன் நம்மைத்தேற்றுவான் என்று சொல்லி, அவனுக்கு நோவா என்று பேரிட்டான்"(ஆதி.5:29) என்று வாசிக்கிறோம். அந்தப்படியே நோவா அநேகருக்கு ஆறுதலாக இருந்தான். யோசேப்பை அவன் சகோதரர்கள் எகிப்துக்குக் கொண்டுபோகும்படியாக விற்றுப்போட்டார்கள். தேவனோ அவனுடனே கூட இருந்து எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்து எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமூகத்திலே அவனுக்கு கிருபையையும் ஞானத்தையும் அருளினார். பழைய குரோதத்தை வைத்துக்கொள்ளாமல் தன்னிடம் வந்த சகோதரர்களை ஏற்றுக்கொண்டு "பயப்படாதிருங்கள் நான் உங்களையும், உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்"(ஆதி.50:21).

யோபின் குடும்பத்தார்களும் அவனுக்கு அறிமுகமான அனைவரும அவனிடத்தில் வந்து, அவன் வீட்டிலே அவனோடே போஜனம்பண்ணி, கர்த்தர் அவன்மேல் வரப்பண்ணின சகல தீங்கினிமித்தம் அவனுக்காக அங்கலாய்த்து, அவனுக்கு ஆறுதல் சொல்லி, அவரவர் ஒவ்வொரு பொன்ஆபரணத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள்" (யோபு42:11). ஆறுதல் வாயோடு நின்றுவிடாமல் கிரியைகளிலும் காண்பித்தார்கள். நாம் கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது என்று சொல்லி விட்டு கிரியை செய்யாமல் நின்று விடுவோம். அப்படியில்லாது நம்மால் முடிந்த உதவிகளை செய்ய முற்படுவோம்.

"நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்"(1கொரி.1:3). "பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏக சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வாராக"(ரோ.15:6).

"கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏக சிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடே கூட இருப்பார்"(2கொரி.13:11).

# புதிய சமய பழக்கங்கள்

## *New Religious Practices*

*J.C.Choate*



மத உலகம் அடிக்கடி மாறிக்கொண்டேயிருக்கின்றது. சில ஆண்டுகளுக்கு முன்பாகக் கூட நினைத்துப்பார்த்திராத பழக்கங்கள் இன்று அதிகமாகக் காணப்படுகிறது. புதிய சபைகள், புதியநாமங்கள், புதிய ஆராதனை முறைமைகள், புதிய தலைவர்கள், புதிய போதனைகள் மேலும் புதிய தத்துவங்கள் நிறைந்து காணப்படுகிறது.

உதாரணமாக பெந்தெகொஸ்தே ஜனங்கள் மத்தியில் சமீப காலங்களில் இந்தப் பழக்கம் வளர்ச்சியடைந்துள்ளது: 'சுகத்தினை' விரும்புகின்ற அல்லது பரிசுத்தஆவியின் விசேஷத்த 'அபிஷேகத்தினை' விரும்புகின்ற ஜனங்கள் மேடையில் வரிசை வரிசையாகக் காணப்படுகின்றனர். புகழ்பெற்ற பிரசங்கியார் அவர்களுக்கு முன்பாக நின்று அவர்களைத் தொடும்படி கடந்து வருகிறவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் ஏதோ கண்ணுக்குப் புலப்படாத சக்தியினால் தாக்கப்பட்டவர்களைப்போல ஒவ்வொருவராய் பின்னோக்கி விழுந்து, செயலற்று நினைவிழந்தவர்களாய் மாறுகின்றனர். அவ்வாறு அவர்கள் விழுகையில் சிலர் ஒவ்வொருவரையும் பின்னால் நின்று பிடித்து அவர்களைத் தரையில் படுக்கவைக்கின்றனர். சமீபத்தில், நான் டி.வி.யில் இப்படிப்பட்ட காட்சியில் இப்பேர்பட்ட ஒரு பிரசங்கியாரை பார்த்தேன். அவர் வெறுமனே ஜனங்களின் வரிசை பக்கமாக தன்னுடைய கையை அசைத்தார் உடனே ஜனங்கள் பின்னோக்கி விழ ஆரம்பித்தார்கள். மற்றவர்கள் அவர்களை தாங்கிப்பிடிக்க முயற்சித்து பின்பு அவர்கள் கீழே கிடத்தப்பட்டார்கள். அவர் சிரித்து, பரியாசம் செய்யத்தொடங்கி 'நான் உனக்கு கட்டளையிடுகிறேன்! வெளியேறு, அவனை விட்டு புறப்படு எனக் கூறுகின்றார்! அந்த மனிதன் முயற்சிக்கும் போது யாரால் அதிகாரம் செலுத்தப்பட்ட, கண்ணுக்குப் புலப்படாத அந்த சக்தியினால் அவன் மீண்டும் கீழே தள்ளப்படுகிறான், பரிசுத்தஆவியானவர் இவ்வாறு அலட்சியம் பண்ணப்படுவதையும், புதிய ஏற்பாட்டில் அவருடைய வருணனை மற்றும் அவருடைய செயலையும் கவனித்து பார்க்கையில் நான் சோர்ந்து போனேன். இப்படிப்பட்டதான பொய்யான காட்சிகளை நீங்கள்

எங்கும் வாசிக்க முடியாது. வேதாகமம் முழுவதிலும் தேவனுடைய பலத்திலும், பிரசன்னத்திலும் ஜனங்கள் இருக்கும்போது அவர்களுடைய தெளிந்த புத்தியைப் பற்றி வாசிக்கும் போதெல்லாம், அவர்களுடைய மாறுத்தரம் ஆச்சரியத்துடனும் பயத்துடனும் கூட இருந்ததையே வாசிக்கிறோம். ஆவியினால் யாரும் 'கீழே தள்ளப்பட்டிருந்ததாக' அல்லது தேவனுடைய வல்லமையைக்குறித்து பரிகாசம் பண்ணப்பட்டதாகவும் சிரித்ததாகவும் நாம் ஒருபோதும் வாசிக்கிறதில்லை.

பெந்தெகொஸ்தெ மக்கள் தாங்கள் பரலோகபாஷை பேசுவதாக சமீபகாலமாக அடிக்கடி விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். மீண்டும், வேதாகமத்தில் இவ்வாறாக எங்கு வாசிக்கிறீர்கள்? 'பாஷைகளில்'பேசுவது இம்மக்களால் முழுவதும் தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்கள் மட்டும், தங்கள் கைகளை யார் மீது வைத்தார்களோ, அவர்கள் தாங்கள் கற்றறிந்திருந்திராத நவமான பாஷைகள் அல்லது அந்நிய மொழிகளில் பேசுவதற்கு பெலனுடையவர் களாயிருந்தார்கள். ஆனால் அவர்கள் அப்படிப்பேசின போது, ஒவ்வொருவரும் அவர்கள் என்ன பேசினார்கள் என புரிந்து கொண்டார்கள். தயவுசெய்து, அப்போஸ்தலர்கள் பல பாஷைகளில் பேசத் தொடங்கிய போது, அங்குள்ள ஜனங்கள், "நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே, இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?" எனச் சொல்வதின் மூலம் பதிலளித்துள்ளதை அப்.2-ல் வாசித்துப்பாருங்கள் நிச்சயமாக இங்கு 'பாஷை'என்பது 'மொழியை' குறிக்கிறது. அப்போஸ்தலர்கள் அந்நிய பாஷைகளில் அல்லது மொழிகளில் பேசினபோது, அவர்கள் புரிந்துகொள்ளமுடியாத ஒலியை உண்டாக்கவில்லை மாறாக அவர்கள் தங்களுடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்களுடைய பாஷைகளில் பேசினார்கள், எனவே அவர்களால் இயேசுவைப்பற்றியும், இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் என்பது பற்றியும் பேச முடிந்தது. இன்றைக்கு அந்நிய பாஷைகளில் அல்லது மொழிகளில் பேசுகின்றதோ அப்போஸ்தலர்களால் பேசப்பட்டது போலில்லை. அவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கென்று, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நடை முறையில் இருந்தது.

நவீனகால பெந்தெகொஸ்தெ மக்களின் இன்னொரு பழக்கம் தங்களுடைய கைகளை உயர்த்திக்கொண்டு எல்லா பக்கங்களிலும் சுழன்று பாடி ஜெபிக்கிறதாக இருக்கிறது. அவர்களுடைய செயல்கள் இவர்களை வழிநடத்தும் சமயம் இவ்விதமாக நடந்து கொள்ளப் பண்ணுகிறதோ என பார்ப்பவர்களை வினா வெழுப்பப் பண்ணுகிறது. நாம் இவ்விதமான்ப் பழக்கங்களைக் குறித்து வேதவாக்கியங்களில் வாசிக்கிறதில்லை.

இங்கு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொண்டிருப் பதாகவும், ஆனபடியினால் பரிசுத்த ஆவியின் **'வழிநடத்துதலை'** பெற்றிருப்பதாகவும் உரிமை பாராட்டுகின்ற ஜனங்களைக் காண்கிறோம், மேலும் நாம் வேதவாக்கியங்களுக்கு முரணான பல காரியங்களை அவர்கள் அநுசரிக்கிறதையும் போதிக்கிறதையும் காண்கிறோம். **முதலில், பரிசுத்த ஆவியின், ஞானஸ்நானத்தைப் பெற்றிருப்பதாக உரிமை பாராட்டுகின்ற போதிலும், அவர்கள்** தங்களுக்குள்ளாக **பிரிந்திருக்கிறார்கள் அநுசரிக்கின்ற. போதிக்கின்ற காரியங்கள் ஒவ்வொருவருக்கிடையே வேறுபட்டிருக்கிறது, ஒவ்வொருவரும் தாங்கள் சரியானவர்கள் என்றும் மற்றவர்கள் தவறானவர்கள் என்றும் உரிமைபாராட்டுகின்றனர்.**

அடுத்ததாக, கிறிஸ்துவுடனே கூட ஐக்கியமாயில்லாமல் நாமங்களை தரித்துக்கொண்டு, 'பாவிகளின் ஜெபம்' என்ற ஜெபத்தினைக் கூறுவதன் மூலம் இரட்சிக்கப்பட்டுவிடலாம் என ஜனங்களுக்கு போதித்துக் கொண்டும், தங்களுடைய ஆராதனையில் வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டிராத பல்வேறு பழக்கங்களை அநுசரித்துக்கொண்டும் சபைகளில் இருக்கின்ற இவ்வகையான ஜனங்களைப்பற்றி வேதாகமத்தில் நாம் வாசிக்கிறதில்லை. உதாரணமாக, 1. அவர்கள் ஆராதனையில் உயிரில்லா வாத்தியக் கருவிகளின் இசையை பயன்படுத்துகின்றனர் (எபே.5:19). 2. அவர்கள் வாரத்தின் முதல் நாளை காட்டிலும மற்ற நாட்களில் காணிக்கைகளை வசூலிக்கின்றனர் (1கொரி.16:2). 3. வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய திருவிருந்தில் பங்கு கொள்ளாதிருக்கின்றனர் (அப்.20:7). வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஆராதனையின் ஐந்து பாகங்களில், அவர்கள் ஐந்தில் மூன்று பாகங்களை நழுவ விட்டிருப்பது வியப்பாக இருக்கிறது! இவையனைத்திற்கும் மேலாக, புதிய ஏற்பாட்டில் பரிசுத்தஆவியானவரின் தூண்டுதலால் எழுதப்பட்டுள்ள வழிநடத்துதல்களை, இவர்கள் நேரடியாக பரிசுத்தஆவியின் வல்லமையால் தாங்கள் நடத்தப்படுவதாக உரிமை பாராட்டுகின்றனர்! இவற்றில், தங்களுடைய போதனையின் மற்ற பலவற்றில் இருப்பது போல, அவர்கள் தேவனுடைய பரிசுத்தஆவியானவரை தமக்குள்ளே முரண்பாடுள்ளவராக கொண்டிருந்திருப்பார்கள்!

'பாவிகளின் ஜெபத்தைக்'குறித்து பேசுகையில், பல சமய குழுக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுகிறவர்களை இரட்சிக் கப்படும்படிக்கு இதை திரும்ப திரும்ப சொல்லும்படி ஊக்கப்படுத்துகின்றன. இவ்விதமாக ஜெபத்தைச் சொல்லும்படி வேதத்தில் யாரையாவது வலியுறுத்தப்படுவதை நாம் எங்கும் வாசிக்கமுடியாது. மாறாக, கிறிஸ்து சுவிசேஷமானது உலகமெங்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும் எனக்

கட்டளையிட்டு, விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறவன் இரட்சிக்கப்படுவான் என வாக்களிக்கின்றார் (மாற்.16:15,16).

கர்த்தரை விசுவாசித்து, இரட்சிக்கப்படும்படி அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய நீங்கள் அறிந்து, கர்த்தர் எதிர்பார்க்கிற சகலத்தையும் அறியும் படிக்கு உங்களை வேதவாக்கியங்களுக்குச் செல்லும்படி ஊக்கப்படுத்துகிறேன். இதை நீங்கள் செய்யும் போது, கர்த்தர் தாமே தாம் வாக்குத்தத்தம் பண்ணி அதற்காக மரித்தும், அதனுடைய இரட்சகராய், தம்முடைய நாமத்தைத் தரித்திருக்கிறதுமான தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக் கொள்ளுவார். அதன்பிறகே நீங்கள் இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## வேதஅறிவுப் போட்டி எண்: 47-ன் விடைகள்

1. பார்வோனும் அவனுடைய கூட்டத்தார்களும் - யாத்.15:10
2. வலிது - உன்ன.8:6
3. என் ஜனங்களில் - எரே.5:26
4. ஆம் - பிர.7:15
5. மோசம்போனார்களே - ஆமோ.2:4
6. நீடிய பொறுமைக்கு - யாக்.5:10
7. பொய்யனாயிருக்கிறான், சத்தியம் - 1யோவா.2:4
8. அந்தகாரத்தில் - யூதா.6
9. தீமோத்தேயு - பிலி.2:22
10. புது சிருஷ்டியே - கலா.6:15

## வேதஅறிவுப் போட்டி எண்: 47-ல் வெற்றிபெற்றவர்கள்

V. கோவலன் -மதுரை
S. லலிதாபிரேமகுமாரி -மதுரை
G. செப்ஸ்டியன் -கோவை
T. ஜெனி பிரதீபா -மதுரை
குளோரி பௌல்ஜர் -சென்னை
S. நிர்மலா ஜான் -மதுரை
Dr. ஜெயசிங் -மதுரை
Mrs. ஜாஸ்மின் வின்செண்ட்ராஜ் -மதுரை
A.சேவியர் மேரி -மதுரை
M. முருகன் -ஜே.பாளை
T. வேலுச்சாமி -ஜே.பாளை
S. அன்னாள் -கோவை
S. ஜெயராணி -கோவை
P. பூமணி -செ.பாளை
A. ராபர்ட்கிளைவ் -சில்லாங்
A. பவுல் -சில்லாங்
B. ஜெயராணி -கன்னியாகுமரி
R. பிளசன் -கன்னியாகுமரி
S. பவுல்ராஜ் -நவக்காணி
A. பிஜி -செ.பாளையம்
P. ஸ்டெல்லா மார்கிரேட் -காங்கயம்
N. சாலமோன் -காங்கயம்
Mrs. எஸ்தர் சேகர் -கோபி

### ஆவிக்குரிய ஆலோசனை

"கொடுமையை நம்பாதிருங்கள்; கொள்ளையினால் பெருமைபாராட்டாதிருங்கள்; ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்" (சங்.62:10)

# சந்திப்போம்! சிந்திப்போம்!

D.எபினேசர்

**உரையாடல் - 24**

தாவீது: ஆராதனையில் கலந்து கொண்ட அனுபவம் எப்படி இருந்தது யோனாத்தான்?

யோனத்தான்: திருப்தியாக இருந்தது என்று சொல்ல மாட்டேன். ஆனால் வித்தியாசமாக இருந்தது. நிறைய சபைகளின் ஆராதனைக்குப் போயிருக்கிறேன். ஆனால் அ வை க ளி ன் சா ய ல் எதுவுமில்லாமல் மாறுபட்ட ஆராதனையாக இருந்தது.

தாவீது: பைபிளின் உபதேசத்திலிருந்து வித்தியாசமான ஆராதனையாக நிச்சயம் இருந்திருக்காது. ஆனால் யாரெல்லாம் வேதாகமத்தின் உபதேசத்திலிருந்து மாறுபட்டு ஆராதிக்கிறார்களோ அவர்களிடமிருந்து வித்தியாசமானதாக இருந்திருக்கும்.

யோனத்தான்: நீ சொல்வது சரியாக இருக்கலாம். ஆனால் என்னுடைய எதிர்பார்ப்பிலிருந்தும் வித்தியாசமாக இருப்பதாக நான் நினைக்கிறேன்.

தாவீது: அப்படி என்ன நீ எதிர்பார்க்கிறாய்?

யோனத்தான்: தேவாலயம் என்றாலே நம் நினைவுக்கு வருவது கூம்புவடிவிலான சிறு சிறு கோபுரங்கள் அடங்கிய கட்டிடம்தான். அழகிய வேலைப்பாடுகளோடு பார்ப்பதற்கே கம்பீரமாகத் தெரியும். உள்ளே நுழைந்தால் நம்மையும் அறியாமல் ஒரு அமைதியும் பயபக்தியும் ஏற்படும். ஆனால் இங்கே வாடகைக்கு எடுக்கப்பட்ட ஒரு பழைய வீட்டில் ஆராதனை செய்கிறார்கள். கிறிஸ்துவின் சபை கூடும் அநேக இடங்களில் கீற்றுக்கொட்டகைதான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கு தேவாலயத்திற்கான எந்த அடையாளமும் இருப்பதாகத் தெரியவில்லை. அட்லிஸ்ட் ஒரு ஆலயமணி கூட இல்லையே! இது ஆராதனைக்குரிய புனிதத் தன்மையை பாதிக்காதா?

தாவீது: நீ பேசுவது வேடிக்கையாக இருக்கிறது யோனத்தான். மக்களும் இப்படித்தான் சிந்திக்கிறார்கள். மக்களின் எதிர்பார்ப்பிற்கேற்ப பிரிவினை சபையார்களும் தீனி போடுகிறார்கள். ஒரு கிராமத்தில் நடந்த சம்பவத்தைச் சொல்கிறேன் கேள். கிறிஸ்மஸ் பண்டிகை சமயம் என்று நினைக்கிறேன். அங்குள்ள ஒரு பிரபலமான பிரிவினைச் சபையைச் சேர்ந்த போதகரிடம் சில பெண் மணிகள் இப்படியாகக் கேட்டார்கள், "ஐயா, இந்துக்கள் தங்கள் பண்டிகைகளில் மாவிளக்கு வைக்கிறார்கள், பொங்கல் வைக்கிறார்கள். நாம் அப்படி செய்யக்கூடாதா" என்றார்கள். அதற்கு அவர் சொன்னார் " யார் சொன்னார்கள் வைக்கக்கூடாதென்று! மாவிளக்கு வைங்க, பொங்கல் வையுங்க, உங்களுக்கு என்னென்ன தோணுதோ அதெல்லாம் செய்யுங்கோ" எப்படி இருக்கிறது இது? எனவே மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற ஆரம்பித்து விட்டால் நாம் எங்கே போய்விழுவோம் என்று பார்த்துக் கொள். சரி நேரமாகிவிட்டது. பல விளக்கங்களோடு உன்னை மீண்டும் சந்திக்கிறேன்.

-மீண்டும் சந்திப்போம்!

சிறுவர் பகுதி

# மெலித்தா

வேதபகுதி: அப்.28:1-10



மத்தியதரைக் கடல் பகுதியில் இருக்கக் கூடிய ஒரு தீவின்பேர்தான் மெலித்தா. இந்த தீவில் இருந்தவர்கள் அன்பு செலுத்துவதில் வல்லவர்கள். ஒரு முறை பவுல் கைது செய்யப்பட்டு கப்பற் பயணத்தில் இருக்கும்போது இத் தீவிற்கு சென்றார். அப்பொழுது மழைக்காலமாக இருந்தபடியால் அத்தீவார் குளிருக்காக நெருப்பை மூட்டி பவுலையும் மற்றவர்களையும் சேர்த்துக் கொண்டார்கள்.

அந்தவேளையில் பவுல் சில விறகுகளை வாரிக்கொண்டுவந்து அந்த நெருப்பில் போடுகையில், ஒரு விரியன்பாம்பு அனலுறைத்துப் பவுலின் கையைக் கவ்விக்கொண்டது. அதைக் கண்ட அந்த தீவார் இந்த மனுஷன் கொலை பாதகன் இதற்குச் சந்தேகமில்லை; இவன் சமுத்திரத்திற்கு தப்பிவந்தும் பழியானது இவனைப்பிழைக்கவிடவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லி கொண்டாங்க. பவுலோ அந்த விஷப்பூச்சியை தீயிலே உதறிப்போட்டு ஒரு தீங்கும் அடையாதிருந்தான். அவர்களோ அவன் வீக்கங்கண்டு அல்லது அவன் சடிதியாய் விழுந்து சாவானென்று மிக கவனமாக பார்த்துக்கொண்டிருந்தார்கள். பவுலுக்கோ ஒரு சேதமும் ஏற்படாததைக் கண்டபோது, இவன் தேவனென்று சொல்லிக்கொண்டார்கள்.

இவைகளுக்குப் பின்பு அந்த தீவின் முதலாளியாகிய புபிலியு என்பவன் இவர்களை ஏற்றுக்கொண்டு மூன்று நாள் நன்கு கவனித்தான். அவனுடைய தகப்பன் ஜுரத்தினாலும் இரத்தபேதியினாலும் வருத்தப்பட்டுக்கிடக்கிறதை அறிந்த பவுல் அங்கு சென்று ஜெபம் பண்ணி அவனைக் குணமாக்கினான். இதை அறிந்த அந்தத் தீவில் உள்ள அநேக வியாதிக்காரர்களும் வந்து குணமாக்கப்பட்டார்கள். அந்த தீவார் பவுலுக்கும் உடன் வந்தவர்களுக்கும் செய்த மரியாதை கொஞ்சமல்ல நஞ்சமல்ல அநேகம். அந்நியர்களாகிய அவர்களின் அன்பு எப்படிப்பட்டது பார்த்தீர்களா? அந்நியர்களே இவ்வளவு அன்பு கூர்ந்திருக்கும்போது நாம் அதைக் காட்டிலும் அதிகமான அன்பு கூரவேண்டியது அவசியமல்லவா? நீங்களும் பிறனிடத்தில் அன்பு கூருவீர்களா?

***மனப்பாட வசனம்***

"உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரீக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள்" (யாக்.2:8)

பாடம் - 5

# சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள பெயர்கள்
# NAME OF THE CHURCH

J.C.Choate

சபை வசனரீதியாக இருக்குமாயின், அதன் பெயரும் வசன ரீதியில் இருக்கவேண்டும். எப்படியிருப்பினும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட அநேக சபைகள் மனிதப்பெயர்களையும் பட்டங்களையும் கொண்டுள்ளன. இவைகள் எப்படி வந்தன? சில பெயர்கள் அதின் ஸ்தாபகர்களை கனப்படுத்தும்படி "லூத்தரன்" போன்ற பெயர்களை வைத்தனர். சிலர் ஞானஸ்நானம் அல்லது கர்த்தருடைய ஊழியத்தை செய்கிற முறை போன்றவற்றை உயர்த்திக் காட்டும்படி பெயரிட்டனர். சிலர் பெந்தகொஸ்தே அல்லது ஏழாம் நாளாகிய ஒய்வு நாள் போன்ற நாட்களை மகிமைப்படுத்தத்தக்க வகையில் பெயரிடுகின்றனர். இன்னும் சிலர் (சபையின்) ஆளுகை அமைப்பை கோடிட்டுக் காட்டி, சபையின் கண்காணிகளின் (Presbyters) ஊழியத்தைக் கொண்டு பெயரிட்டுள்ளனர். ஆனால் இவைகளனைத்தும், இன்னும் குறிப்பிட இயன்றவைகளுமாகிய அனைத்துப் பிரிவுகளும், கிறிஸ்துவுக்குரிய கனம், மகிமை, துதிகளை மேற்குறித்த மனிதர்களால் உருவானப் பிரிவுகளுக்கு பெயர்கள், பட்டங்கள், விளக்கங்கள் என்ற பெயரில் கொடுக்கின்றனர்.

அநேக காரணங்களால் மனிதப் பெயர்களும், பட்டங்களும் தவறானவை. முதலாவதாக, அவைகள் பிரிவினைகளை உண்டாக்குகின்றன. தேவன் செயல்பட எண்ணமிடாத வித்தியாசங்களை அவைகள் ஏற்படுத்துகின்றன. ஜனங்களை அவைகள் பிரிக்கின்றன, நாம் எல்லோரும் ஒன்றாயிருக்க வேண்டும் என கிறிஸ்து ஜெபித்த பதிவாகிய யோவான்17-ம் அதிகாரத்தையே (அவர்கள்) அவைகள் எதிர்க்கின்றன. இரண்டாவதாக, வேதவசனங்களிலே (பிரிவினைகளாகிய) அவைகள் கடிந்து கொள்ளப்பட்டுள்ளன. 1கொரிந்தியர்1:10-17-ல் அப்போஸ்தலனாகிய பவுல், மனிதப் பெயர்களைத் தரித்துக் கொண்டு பிரிவினைகளையும், குழுக்களாக பிரிவு கொண்ட கூட்டங்களையும் தவறானவை என்பதைக் காட்டுகிறார். மூன்றாவதாக, கர்த்தருடைய பெயருக்குப் பதிலாக மதப் பெயர்களை சூடி கொள்கிற முறையிலும் அவைகள் தவறானவை. இருந்தும் கிறிஸ்துவின் பெயரைக் குறித்து " அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பில்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான் (அப்.4:12). நான்காவதாக, மனிதனால் (சபைக்கு) கொடுக்கப்படும் பெயர்களும், பட்டங்களும் தவறாக வழிநடத்தவும், குழப்பங்களை விளைவிக்கவும், அவிசுவாசிகளுக்குள்ளே தவறான எண்ணங்களை உருவாக்கவும் செய்கிறது. ஐந்தாவதாக, அப்படிப்பட்டவை

(பெயர்)களைத் தரித்துக் கொள்பவர்களையும், அவர்களால் கிறிஸ்துவினிடத்தினின்று வழுவிப்போனவர்களையும், (நித்திய ஜீவனை) இழந்து போகச் செய்யும். இந்தக் காரணங்களால், அவைகள் தவறானவைகளும்,பாவங்களுமாகும்.

சபையைப் பொறுத்த மட்டில், கிறிஸ்து அதை ஸ்தாபித்தார் (மத்.16:18). அவர் தமது சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது (அப்.20:28), அவரே அதற்கு இரட்சகராயிருக்கிறார் (எபே.5:23), தலையுமாயிருக்கிறார் (கொலே.1:18), ஸ்தாபகரும், கட்டியவரும், இரட்சகரும், தலையாயுமிருக்கிறவருடைய பெயரை சபைத் தரித்துக் கொள்ளவேண்டியது இயற்கை தானே. ஆதலால் தான், ரோமாபுரி சபையாருக்கு பவுல் எழுதும்போது, தனது வட்டாரத்தில் இருந்த பிற பிராந்திய சபையார்களுடன் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும்போது, "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" என்று சொன்னார் (ரோம.16:16). பிறகு கொரிந்து பட்டணத்து சபைக்கு சொல்லும்போது, "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயு மிருக்கிறீர்கள்" என்றார் (1கொரி.1:2; அப்.29:28), தேவனுடைய ராஜ்யம் என்றும், (1கொரி.6:9), கிறிஸ்துவின் இராஜ்யம் என்றும் (எபே.5:5), தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யம் என்றும் (கொலோ.1:13), கர்த்தருடைய இராஜ்யம் என்றும் (2பேது.1:11), சபை என்றும் (அப்.13:1), ஜீவனுள்ள தேவனுடைய சபை என்றும் (1தீமோ.3:15), முதற்பேரானவருடைய சபை என்றும் (எபி.12:23), இப்படி பலவகையில் கூறப்பட்டுள்ளன. வேறெந்த தனி நபருடைய பெயரிலோ அல்லது சுய வியாக்கியான பெயரிலோ சபை அழைக்கப்படவில்லை. அதே வேளையில், தேவனுக்குரியதெல்லாம் கிறிஸ்துவுக்குரியது அல்லது கிறிஸ்துவுக்குரியதெல்லாம் தேவனுக்குரியது. மேலும் அந்தப் பெயர்கள் அனைத்தும் கிறிஸ்து ஸ்தாபித்த சபையையே குறிக்கும். அது கிறிஸ்துவின் (கிறிஸ்துவுக்குரிய) சபையாக இராவிட்டால், பிறகு அது யாருடைய சபையாகும்? அதோடு, இந்தப்பெயர்களையும் அதற்கு சுய வியாக்கியானங்களையும் அளித்துக் கொள்பவர்கள், கர்த்தருடைய சபைக்கு வேறே (மனிதப்) பெயர்களைத் தெரிந்துகொண்டு, சத்தியத்திற்குப் புறம்பே விலகிப் போவதில் நாட்டம் செலுத்துகின்றனர். ஆனால் நாமோ வேதாகமம் மட்டில் தரித்திருந்து, வேதாகமம் சபையைக் குறித்து கூறுவது எதுவோ அதே பெயரில் அழைப்போமாக. அப்பொழுது நாம் சரியானவர்களாய் இருப்போம்.

சபை அங்கத்தினர்களுக்கு இடப்படும் பெயர்களையும், வேத வசனம் தெளிவாக்குகிறது. துவக்கமாக தீர்க்கதரிசியாகிய ஏசாயா கூறும்போது, தேவன் தமது மக்களுக்கு ஒரு புதிய நாமத்தைக் (பெயரைக்) கொடுப்பார் என்று சொன்னார் (ஏசா.62:2). அநேக வருடங்களுக்குப் பிறகு, பவுல் அந்த நாமத்தைக் குறித்துப்பேசினார் (அப்.9:15). ஆனாலும் புறஜாதிகளும் தேவனுக்குக் கீழ்ப்படிகிற சந்தர்ப்பம் கிட்டும்வரை அந்த நாமம் கொடுக்கப்படவில்லை, இவைகள் அனைத்தும் சிரியாவிலுள்ள

அந்தியோகியாவிலே சீஷர்கள் முதல் முதலில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டபோது நிறைவேறியது (அப்.11:26). பின்னதாக நாம் வாசிக்கிறோம், பவுல் அக்கிரிப்பா இராஜாவினிடத்தில் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது " பவுலே நீ என்னைக் கொஞ்சங்குறைய கிறிஸ்தவனாக சம்மதிக்கப்பண்ணுகிறாய்" என்று (இராஜா) சொன்னான். இறதியாக, ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் அதனிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" என்று பேதுரு சொல்லியிருப்பதை வாசிக்கிறோம் (1பேது.4:16) எனவே புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றிப்போன கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே அழைக்கப்பட்டனர். இன்றைக்கு கர்த்தர் நம்மிடத்திலுன் இப்படி அழைக்கப்படுவதையே எதிர்பார்க்கிறார். கிறிஸ்தவர்கள் என்று மாத்திரம் அழைக்கப்படாமல் கூடவே வேறு ஒரு பெயரையோ அல்லது பட்டத்தையோ தரித்துக்கொள்வோமாகில், பிறகு நாம் உண்மைக் கிறிஸ்தவர்களாக இருக்க இயலாது. கிறிஸ்தவன் என்ற பெயர் ஒருவனை, உலகிலுள்ள மற்றவர்களிடத்திலிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது, அதைத்தான் கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

சபைக்குரிய பெயரிலும், அதன் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படும் பெயரிலும், கிறிஸ்துவின் நாமமே உயர்த்தப்படவேண்டும். ஏன்? ஏனெனில் அது குடும்பப்பெயர் (எபே.3:14,15), அது எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் (பிலி.2:9-11). அந்த நாமத்திலேயே இரட்சிப்பு காணுகிறது (அப்.4:12). ஆகையால், நாம் கிறிஸ்துவின் நாமத்தை விசுவாசிக்கவேண்டும் (1யோவா.5:13), அந்த நாமத்தை அறிக்கையிட வேண்டும் (2தீமோ.2:19), மனந்திரும்பி அந்த நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும் (மத்.3:32), அந்த நாமத்திலே கூடி ஆராதிக்க வேண்டும் (மத்.18:20). எல்லாவற்றையும் அவருடைய நாமத்தினாலே செய்ய வேண்டும் (கொலோ.3:17). அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனைப் பெறுகிறோம் (யோவா.20:30,31).

இதை முறைப்படி மனதில் கொண்டால் ஒருவரும் பெயரிலே (நாமத்திலே) ஒன்றுமில்லை என்று சொல்ல மாட்டார்கள். நிச்சயமாக மனிதனுடைய நாமத்திலேயோ தரித்துக்கொள்ளும் பட்டத்திலேயோ இரட்சிப்பு இல்லை. மாறாக அதைத் தரித்துக் கொண்டவர்கள், அதினாலே (ஆத்துமாவை) இழந்து போனவர்களாக இருப்பார்கள். மாறாக, கிறிஸ்துவின் நாமத்திலே மட்டுமே இரட்சிப்பு உண்டு.

பாடம் - 5

கேள்விகள்

**தயவு செய்து சரியான வார்த்தைகளால் பூர்த்தி செய்க :**

1. "சபைக்கு வசன ரீதியான --------இருக்க வேண்டும்.
2. "மனிதனால் உருவாக்கப்பட்ட பெயர்களும் பட்டங்களும் ------
3. -------- வின் ஜெபம் ----------- த்திற்காக வேண்டக்கூடியதாயிருந்தது.

4. " நீங்களே கிறிஸ்துவின் ---------"

5. " தேவன் தமது ஜனங்களுக்கு ஒரு ---------க் கொடுப்பார்

***தயவு செய்து சரியான பதிலை வட்டமிடவும் :***

ஆம் / இல்லை 1. சபை வசன ரீதியாக அமைய வேண்டுமானால், வசன ரீதியான பெயரையும் தரித்துக் கொள்ளவேண்டும்?

ஆம் / இல்லை 2. மனிதனால் கொடுக்கப்படும் பெயர்களும் பட்டங்களும் தவறானவையா?

ஆம் / இல்லை 3. இரட்சிப்பு கிறிஸ்துவின் நாமத்திலே மட்டும் தான் உண்டா?

ஆம் / இல்லை 4. நாம் எல்லோரும் ஒரே நாமத்தை மட்டுமே தரித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறாரா?

ஆம் / இல்லை 5. கர்த்தருடைய நாமத்தைத் தரிக்காமலேயே ஒருவன் கர்த்தரை மகிமைப்படுத்தக் கூடுமா?

**தயவு செய்து சரியான பதிலைக் கொடுக்கவும்:**

1. மனிதனால் கொடுக்கப்பட்ட சில பெயர்கள் எப்படி உருவாயின?
2. மனிதனால் கொடுக்கப்பட்ட பெயர்களும், பட்டங்களும் ஏன் தவறானவை என வரிசைப்படுத்துக.
3. கிறிஸ்து எதற்காக ஜெபித்தார்?
4. தமது சகோதரர்கள் பிரிவினைக் குழுக்களாக இருந்ததை பவுல் அறிந்தபோது, பவுல் செய்தது என்ன?
5. சபை ஏன் கிறிஸ்துவின் பெயரை (நாமத்தை) தரித்துக் கொள்ள வேண்டும்?
6. ரோமர்16:16-ஐ மனப்பாடமாக எழுது.
7. 1கொரி.12:27-ல் காணும் கிறிஸ்துவின் சரீரம் என்பது என்ன?
8. சபையின் வேறு சில பெயர்களைக் குறிப்பிடுக?
9. சபை கிறிஸ்துவுக்குரிய (கிறிஸ்துவின்) சபையாக இராவிட்டால் பிறகு அது யாருடைய சபையாக இருக்கக்கூடும்?
10. சபையின் அங்கத்தினர்கள் என்னவென்று அழைக்கப்பட்டனர்?
11. கிறிஸ்தவன் என்னும் பெயர் குறிப்பிட்டுள்ள மூன்று வசனப்பகுதிகளைக் குறிப்பிடுக?
12. இன்றைக்கு நாம் எப்படிப்பட்ட பெயரில் அழைக்கப்படவேண்டும் என கர்த்தர் எதிர்பார்க்கிறார்?
13. ஏதோ ஒரு புனைப் பெயருடன் கூடிய கிறிஸ்தவன் என்று நம்மை அழைத்துக்கொள்வது சாத்தியமா?
14. நாம் ஏன் கிறிஸ்தவின் நாமத்தை உயர்த்த வேண்டும்?
15. கிறிஸ்துவின் நாமத்தில் நாம் செய்ய வேண்டியது என்ன?

***-Selected***

# நான் குற்றத்தை ஒப்புக்கொள்ள மாட்டேன்
# I Won`t Apoligize

*-Betty Burton Choate*



ஒருவன் சச்சரவுகளில் அநீதியான வழியைச் சார்ந்திருக்கின்ற அல்லது மற்றவர்கள் மீது கெட்ட நடவடிக்கைகளைக் காண்பிக்கின்ற வேளையில் குற்றத்தை ஒத்துக்கொள்ள மறுத்தல்- 'மனித' இயல்பாக இருக்கலாம். அல்லது இது "குற்றத்தை ஒப்புக் கொள்ளுவதின் மூலம் நான் குற்றவாளியாய் இருக்கிறேன் என நான் ஒத்துக்கொள்ளாவிட்டால், அப்புறம் இது மற்ற மனிதனுக்கு பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வழி ஏற்படும்" என்ற மனநிலை வளர்ந்து கொண்டேயிருக்கலாம்.

முகத்தோற்றத்தையும் இருதயத்தையும் தெளிவுபடுத்தாதிருக்கும் எந்த அடிப்படைக் காரணமும், 'என்னை மன்னித்துவிடு' என்ற எளிய வார்த்தைகள் சண்டை நேரத்தினை முறியடிக்கும் நல்ல விளைவாக இருக்கிறது.

மனிதர்கள் வித்தியாசமான கோணத்தில் ஒருவருக்கொருவர் மிகப்பெரிய வேறுபாட்டுடன் இருக்கின்றனர். வழக்கமாக ஒரு நிச்சயிக்கப்பட்டவற்றிலிருந்து காரணமில்லா விரோதநோக்குடைய கருத்தினை மற்றவற்றில் அல்ல நம்முடைய சுய காரியங்களில் காண்கின்றோம். கணவனும் மனைவியும் அந்நியர் மத்தியில் அல்லது வேலை செய்யும் அலுவலகத்தில் வழக்கமாக காணப்படாத நாகரிகமற்ற பிரச்சனைகளை அடிக்கடி சந்திக்கின்றனர். கணவனும் மனைவியும் நாளுக்கு நாள் தங்களுடைய கஷ்டங்கள், சோர்வுகள், சவால்கள், ஏமாற்றங்கள் அடிக்கடி வார்த்தைகளாக வெடிக்கின்றன. மனநிலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன, வார்த்தைகள் அள்ளி வீசப்படுகின்றன, வேதனைகள் பாரமாக்கப்படுகின்றன, கண்ணீர்கள் சிந்தப்படுகின்றன யாரோ ஒருவர் தவறிழைத்து விட்டார்.

ஆனால் யார் தன் குற்றத்தை ஒத்துக்கொள்ளுவார்? ஒருவேளை யாரும் நேர்மையுடன், உணர்வடைந்து 'நான் தவறிழைத்து விட்டேன் நான் அதைச் சொல்லியிருக்கக்கூடாது' என தம்மை நிதானித்துப் பார்க்கமாட்டார்கள். பதிலாக, ஒரு குளிர்ச்சியான மௌனம் ஒரு வேளை சச்சரவினை முடிவுக்குக் கொண்டு வரும், பின்பு இருவரும் தங்களுடைய சொந்த வேலைக்குத் திரும்புவார்கள். நேரங்கள் கடந்து செல்லும்,

குளிர்ந்தநிலை இருவருடைய இருதயத்திற்குள் ஆழம் ஆழமாக சென்று முடிவை உண்டாக்கும். ஒரு வேளை அடுத்தநாள், அல்லது அதற்கடுத்த நாள், காரியங்கள் ஒரு வழியாக மறுபடியும் சீராகக் காணப்படும். உரையாடல் பழைய நிலையைக் கொண்டுவரும். வாழ்க்கை தொடர ஆரம்பிக்கும்.

ஆனால் இருவருடைய இருதயங்களில் என்ன நடந்திருக்கின்றது? காயங்கள் உண்டாக்கப்பட்டது, பாதுகாப்பிற்கென்று கடினமான உணர்ச்சியற்ற நிலை உருவாக்கப்பட்டது. சுகமாக்கும் நிவாரணி உபயோகிக்கப்படவில்லை, எனவே நிரந்தர வடுக்கள் ஏற்பட்டுள்ளன.கடினமான உணர்ச்சியற்ற நிலையிலும், வடுக்களின் அடியிலும் புதைக்கப்பட்டவைகள் கோபம், மனக்காயம், மனக்கசப்பு போன்றவைகள் ஒரு வளருகின்ற வேராக இருக்கின்றது.

அடுத்த முறை கோபம் வெளிப்படுகிறது, இது முந்தின சண்டையில் கொழுந்துவிட்டு எரிகின்றவையான கசப்பின் அடுக்கினை ஒளிவிடச்செய்கிறது- மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு, மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு, மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு ..........

எனவே திரி அணைகிறது, கோபம் அதிவேகமாக வெடிக்கிறது, கசப்பு மிகக் கசப்பாகின்றது- சண்டை மிக மோசமாகின்றது. கணவனும், மனைவியும் சண்டையிட்டுக்கொண்டிராதிருந்தாலும் கூட எப்பொழுது அவர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் மனக்கசப்பில் வளருவார்கள்? இருவருக்கிடையே ஒருவர் இன்னொருவரை விட மிகச்சிறந்தவராக எப்பொழுது நினைப்பார்கள்? இவைகளெல்லாம் திருமண வாழ்விற்குள் அல்லது விவாகரத்தின் முடிவில் பேதத்தினால் ஏற்படும் விளைவாகிய இவைகளெல்லாம் அடிப்படை பிரச்சனைகளாக இருக்கின்றன.

கணவன் மனைவி இருவரும் **திரும்பிச் சென்று குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்ற தங்களுடைய தீர்மானத்தைக் குறித்து மறு யோசனை செய்ய வேண்டியது அவசியம்**. 'என்னை மன்னித்துக் கொள்'- எப்பேர்பட்ட எளிய வார்த்தைகள், சொல்லுவதற்கு மிக சுலபமானது, மிகவும் சத்திவாய்ந்தது!

'என்னை மன்னித்துக்கொள்' என்று நேர்மையுடன் கூறுவது என்ன விளைவை ஏற்படுத்துகிறது? முதலாவது, இது நேர்மையுடையதாக இருக்குமானால், இது ஒருவருடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கின்ற மற்றும் ஒருவர் ஒரு சார்புடையவராக அல்லது இருவர் மேலும் குற்றம் உண்டு எனவும் தீர்மானிக்கின்ற முடிவினை கொண்டுவரும். தவறை ஒப்புக்கொள்ளுகின்ற செயல் தவறான பெருமையை அழித்து, தாழ்மையான மனநிலையினை உருவாக்கும். தன் குற்றத்திற்காக மனவருந்தும் இந்த மனநிலையுடனும், குற்றத்தை ஒத்துக்கொள்ளக்கூடிய இந்த வலி நிவாரணியுடனும், இருவருடைய இருதயங்களில் குணமாக்கும் செயல் ஆரம்பிக்கும். மனக்கடினத்தின் அடுக்குகள் மற்றும் மனக்கசப்பினால்

குமுறிக்கொண்டிருக்கும் ஜூவாலையும் உருகிப் போய்விடும். மேலும் கடந்த காலத்தின் பிரச்சனைகளின்றி உள்ளான சமாதானத்தின் உணர்வுகளால் நாளுக்கு நாள் நல் உறவு முன்னேற்றமடைந்து கொண்டே செல்லும்.


எபேசியர் 4:26-ல், ஆவியின் தூண்டுதலினால் பவுல் இவ்வார்த்தைகளை எழுதினார், "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது". இந்த வார்த்தைகளின் பொருள் என்ன? முதலாவது, கிறிஸ்தவர்கள் ஒருபோதும் கோபங் கொள்ளக் கூடாது என அவர் கூறவில்லை, அல்லது கோபங்கொள்ளுவது பாவம் என்றும் கூறவில்லை. இவ்வுலகில் தவறான காரியங்கள் பல இருக்கின்றன, மேலும் அவைகளின் மேல் கோபங்கொள்ளுவது நீதியுள்ளதும் சரியானதுமாக இருக்கிறது. ஆனால் பவுல் சொன்னார், "உங்களுடைய கோபம் பாவஞ்செய்வதற்கு இடங்கொடாதீர்கள்!" அது முழுவதும் வித்தியாசமானது. மேலும் அதிகமான ஜனங்கள் செய்யக்கூடியதும் அதுவே!

நான் ஒரு கணவனுக்குரிய நிலையினை, மனைவியினிடத்தில் கண்டிப்பு மற்றும் முன்கோபத்துடன் நடந்துகொண்ட அவளுடைய கணவனிடத்தில் கண்டிருக்கிறேன். இயற்கையான பதில் மனைவியினுடைய பங்கிலும் அதே கண்டிப்பான ஜூவாலையினை அதிகமாக தூண்டிவிட்டதைப் போல் இருந்திருக்கும். மாறாக அவள் நீதிமொழிகள்15:1-ல் சாலொமோனால் பேசப்பட்டது போல நடந்து கொண்டாள்: "மெதுவான பிரதியுத்திரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்". பிரதியுத்திரமாக, அவள் அவர்களுக்கிடையே கோபத்தினை சகஜநிலைக்கு மாற்றிவிட்டாள், ஏனென்றால் அவள் தன் கணவன் நியாயமாக யோக்கியத்துடன் நடந்து கொண்டது போல அவள் அவனுக்குப் பதிலளிக்கவில்லை.

ஆம், அதுவே பொறுமையோடு பதிலளித்தல், மற்றும் சமாதானத்தை நாடுதல் போன்றவை கோபத்தில் சவுக்கடி கொடுப்பதைக் காட்டிலும் பிரச்சனைகளை விலக்குவதற்கு ஒரு திறவுகோலாயிருக்கிறது. பவுலுடைய எச்சரிப்பின் இரண்டாவது பாகம் நாம், 'சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்பாகவே நம் எரிச்சல் தணியவேண்டும்" என்பதாகும். நீங்கள் கோபமனதுடனே உங்கள் படுக்கைக்குச் சென்றால், நீங்கள் விழித்தெழும்போது நீங்கள் இன்னும் மோசமான உணர்வடைந்ததை எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? எனவே தான் வெகு நீண்ட நாட்களுக்கு மேலாக நமக்குள் கோபம் குடிகொண்டிருக்க அனுமதிக்கக் கூடாது என வெளிப்படையாகவே நாம் எச்சரிக்கப்படுகிறோம். இது அழித்து விடும்.

*-தமிழில் கு ளோரி அர்ஜூனன்*

# தேவன் பிரிவினையை ஏற்றுக்கொள்ளார்




பிரிவினையானது மிக கொடிய நோய்போன்றது. ஆனால் நோய்க்கு மருந்து இல்லாமற்போகலாம். பிரிவினையை முறியடிக்க ஏற்ற மருந்து பரிசுத்த வேதாகமத்தில் உண்டு. "பிரிந்துபோகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான், எல்லா ஞானத்திலும் தலையிட்டுக் கொள்ளுகிறான்" (நீதி.18:1). பிரிவினையைக் கர்த்தர் அனுமதிக்கிறதில்லை. ஏனென்றால் "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?" (1கொரி.1:13) ஆனால் நம்மில் அநேகர் நான் அந்த ஊழியனைச்சார்ந்தவன் அந்த குரூப்பில் சேர்ந்து ஊழியஞ்செய்கிறேன். உங்களோடு பேசினால் என்னை அவர்கள் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள். அந்தியோகியாவில் உள்ள சீஷர்களுக்கு முதல் முதல் கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. இப்பெயர் வழங்கப்பட்டபோது நான் பவுலை சேர்ந்தவன் என்றோ அல்லது நான் பேதுருவை சேர்ந்தவன் என்றோ ஒருவரும் சொல்லவில்லை எல்லோரும் கிறிஸ்துவைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களாகயிருந்தார்கள். இன்றும் நம் ஆண்டவர் நமக்கு போதிக்கும் வசனம் இதுதான் "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்: ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" (யோவா.12:26). நீங்கள் இயேசுவைப் பின்பற்றினால் உங்களுக்குள்ளே பிரிவினை ஆவியும் இருக்காது, பிரிவினை சபையும் இருக்காது.

ஆண்டவர் ஜெபிக்கும்போது "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" (யோவா.17:22) என்கிறார். தேவன் பிரிந்து இருக்கவில்லை. பிதா குமாரன் பரிசுத்தஆவியானவர் இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். தேவன் தம்முடைய சித்தத்தை குமாரன் மூலமாகவும் பரிசுத்தஆவியானவர் மூலமாகவும் வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவானவர் உயிர்த்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என பார்க்கிறோம். அந்த நித்தியத்தில் வாழப்போகும் நாம் பிரிவினையோடு இருந்தால் எப்படி?

தாவீது ராஜா பாடும்போது "இதோ, சகோதரர் ஒருமித்துவாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?"(சங்.133:1) என்று பாடுகிறார். உண்மைதான் ஒருமித்து வாசம்பண்ணுகிறது மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்.

பிரிவினைக்கு மூலகாரணமாயிருப்பது பகை. "தன் சகோதரனைப்பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது"(1யோவா.3:15). கொலை என்பது கொடுரமான செயல். இதைக்குறித்து கர்த்தர் குறிப்பிடும் போது, "கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக் கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்"(மத்.5:21,22)என்று கர்த்தர் உரைக்கிறார். முன்னே கொலை செய்தால் தான் குற்றம் ஆனால் தற்போது நியாயமில்லாமல் கோபித்துக்கொண்டாலே குற்றம் என்று வாசிக்கின்றோம். இப்படியிருக்க நாம் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்வதோ, மூடன் என்று சொல்லுகிறதோ மாபெரும் தவறாக இருக்கிறது. மேலும் " தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்?"(1யோவா.4:20). இங்கே தன் சகோதரனைப் பகைக்கிறவன் பெய்யன் என திருமறை விளக்குகிறது. திருமறை ஒருக்காலும் பொய்யுரையாது என்பது நாம் அறிந்த உண்மை. ஆக சகோதரனைப் பகைக்கிறவன் பெய்யனாயிருக்கிறான் அவனுக்குள் சத்தியம் இல்லை. சத்தியம் இருக்குமேயானால் பொல்லாங்கனுக்குள், அதாவது முழுவதும் பாவத்தில் கிடக்கும் பாவியை எப்படி மன்னித்து கிறிஸ்து ஏற்றுக்கொள்கிறாரோ, அதே சிந்தை அவனுக்குள்ளும் இருக்கும்.

தேவ சமூகத்தில் காணிக்கை செலுத்த வரும்போது "உன்பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன்

காணிக்கையைக் செலுத்து"(மத்.5:23,24). கர்த்தர் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும் முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை சொலுத்து என்கிறார். இவ் வசனத்தை யாருக்கோ சொன்னதுபோல அனேகர் எடுத்துக்கொண்டு மெத்தனமாக இருந்து விடுகின்றனர். "இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே"(ரோம.14:10). தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும். கர்த்தர் சொன்ன காரியங்களுக்கு கீழ்ப்படிய வேண்டியது நமது கடமை. அதைவிடுத்து அதற்கு வியாக்கியானம் கொடுத்துக்கொண்டு காலத்தை தள்ளுவோமானால் நியாயத்தீர்ப்புக்கு எப்படி தப்புவோம்? அவருடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும்.

## உண்மையான சபை தோன்றிய வரலாறும் பிரிவினை சபைகள் தோன்றிய வரலாறும்

### உண்மையான திருச்சபை

| சபை | வருடம் | தோற்றுவித்தவர் | இடம் |
|---|---|---|---|
| கிறிஸ்துவின் சபை | கி.பி.33 | கிறிஸ்து | எருசலேம் |
| ரோமர்16:16 | | மத்தேயு16:18 | அப்.2:14 |
| எபேசியர்5:32 | | அப்.20:28 | ஏசாயா2:2-4 |
| கொலோ1:18 | | எபேசியர்1:22 | லூக்கா24:47-49 |

### பிரிவினைக்கூட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. கத்தோலிக்க சபை | கி.பி.607 | மூன்றாம் போனிபஸ் | ரோம் |
| 2. லூத்தரன் சபை | கி.பி.1517 | மார்டின் லூத்தர் | ஜெர்மனி |
| 3. இங்கிலாந்து சபை | கி.பி.1534 | எட்டான் ஹென்றி | இங்கிலாந்து |
| 4. கால்வினிஸ்ட் சபை | கி.பி.1555 | ஜான் கால்வின் | ஸ்விட்சர்லாந்து |
| 5. பிரிஸ்பிட்டேரியன் சபை | கி.பி.1560 | ஜான் நாக்ஸ் | ஸ்காட்லந்து |
| 6. காங்கிரிகேஷனலிஸ்ட் சபை | கி.பி.1592 | இராபர்ட் பிரவுன் | ஹாலந்து |
| 7. பாப்டிஸ்ட் சபை | கி.பி.1607 | ஜான் ஸ்மித் | ஆம்ஸ்டர்டாம் |
| 8. அமெரிக்கன் பாப்டிஸ்ட் சபை | கி.பி.1629 | ரோஜர் வில்லியம்ஸ் | அமெரிக்கா |
| 9. நண்பர்கள் ஐக்கிய சபை | கி.பி.1665 | டெர்பி ஜார்ஜ்பாக்ஸ் | இங்கிலாந்து |
| 10. மெத்தடிஸ்ட் சபை | கி.பி.1739 | ஜான் வெஸ்லி பால் | இங்கிலாந்து |
| 11. கடைசிகால புனிதர்கள் சபை | கி.பி.1830 | ஜோசப் ஜான் ஸ்மித் | நியூயார்க் |
| 12. ஏழாம் நாள் சபை | கி.பி.1843 | வில்லியம் மில்லர் | நியூயார்க் |
| 13. கிறிஸ்தவ விஞ்ஞான சபை | கி.பி.1881 | மேரி பெக்கர் எட்டி | போஸ்டன் |
| 14. யேகோவா சாட்சிகள் | கி.பி.1884 | சார்லஸ் டிரஸல் | பென்சில்வானியா |
| 15. தேவனுடைய சபை | கி.பி.1886 | ரிச்சர்ட் ஸ்பர்லிங் | டென்னிஸி |
| 16. நசரேயர் சபை | கி.பி.1895 | பி. எப். பிரீஸ் | கலிபோர்னியா |
| 17. பெந்தெகொஸ்தே சபை | கி.பி.1901 | சில குழுவினர் | இலங்கை |
| 18. அசெம்பிளி ஆப் காட் சபை | கி.பி.1914 | சில குழுவினர் | ஹாட்ஸ் பிரிஸ் |
| 19. இன்னும் அநேகம்............................ | | | |

# மதங்கள்! மாயப்பூக்கள்!!

## RELIGIONS! FLOWERS OF VANITY!!

நெருங்கிப் பார்த்தால் மணமுமில்லை! நிறமுமில்லை! மதங்கள் வெற்றுக்குடங்கள்! எட்டிப் பார்த்தால் உள்ளே எதுவுமில்லை. மகுடிக்கு நாகம் நடனமாடுமென்பர்! உண்மையில் மகுடியின் நாதத்திற்கு ஆடாமல், மகுடியின் சுழற்சிக்குக் கூர்மைப்பார்வை கொண்ட நாகம் "எப்படிக் கொத்தலாம்" என்று ஆடுகிறது. இன்றைக்கு மதங்கள் இரசாயனப் பேரழிவை, பயங்கரவாதங்களை கட்டவிழ்த்து விடுகின்றன. இவைகளின் ஆட்டங்கள் கொத்தும் நாகத்திற்கு சமமானவைகள்!

தாத்தாவின் முதுகிலே பேரன் யானை ஏற்றம் ஏறி, வீட்டின் மூலை எல்லாம் வலம் வந்து கொண்டிருந்தான். "இன்றைக்கு மதங்களும் மனிதனை மண்டியிடச் செய்து" அவன் முதுகில் யானைஏற்றம் ஏறி, அவன் முழங்காலை உடைத்து நிரந்தர நொண்டியாக மாற்றி விடுகிறது.

கடந்த இரு நூற்றாண்டுகளில் ஏறக்குறைய "எல்லா மதங்களுக்கும் மதம் பிடித்தது" என்று சொன்னால் மிகையாகாது. அவைகளை அடக்குவதற்கு "அங்குசமின்றி" தவிக்கிறது இன்றைய உலகம்! போதாக்குறைக்கு மதவியாபாரிகள் இன்றைக்கு உச்சநிலையை அடைந்துவிட்டனர். அவர்களுடைய கற்பனையின் வியாபாரத்துக்கு அளவேயில்லை!

இவர்களின் தந்திரச்சொற்களுக்கும், மந்திர வார்த்தைகளுக்கு முன், மாநில முதல்வர் முதற்கொண்டு நாட்டின் பிரதம மந்திரி வரை, இவர்கள் காலடியில் மண்டியிடுகின்றனர். வேடிக்கையென்ன வென்றால், விண்ணுக்குக் கலம் அனுப்புவர்களும் அவர்களுக்குச் சலாம் அடிக்கின்றனர்!

மனிதன் மயக்கம் அடையும் போது அவனுக்கு
உயிர் இருக்கும், அறிவு இருக்காது!
கண் இருக்கும், பார்வை இருக்காது!
செவி இருக்கும், கேட்கும் திறன் இருக்காது!
உடல் இருக்கும், உணர்வு இருக்காது!

இன்றைய மத மயக்கங்களும் இந்த வகையைச் சார்ந்ததே! அவனுக்கு திருமுழுக்கு அளித்து, தட்டியெழுப்ப சுவிசேஷமாகிய நற்செய்தி வராதவரை மயக்கம் தெளியாது 2தீமோ.2:26.

மயக்கத்திலே கொடிய நிலை எல்லா மதங்களையும் ஒன்றாகப் பாவிப்பது; எந்த மதத்திலும் உறுதியில்லாமல் போன மனிதன், புயல்காற்றில்சிக்கிய படகுக்கு ஒப்பாயிருக்கிறான். ஏனென்றால் திசையுமில்லை; அவனுக்கு கரையுமில்லை;

சமீப காலத்தில் மனிதனை வஞ்சிக்கும் ஆசிரமங்கள் புற்றீசலைப் போல தோன்றி விட்டன. பல ஆசிரமசுவாமிஜிகள் நீதி மன்றங்களால் கொலை, கொடுமை, கொள்ளை, கொடும்பாலியல் போன்ற குற்றங்களுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட ஜென்ம தண்டனைகளைப் பெற்றிருப்பது மிக ஆச்சரியமாயிருக்கிறதல்லவா?

உண்மையில் ஆசிரமங்கள் மனித சிரமங்களாக மாறிவிட்டன! அதின் உள்ளே போன எல்லாருமே திரும்பி வருவதில்லை! திரும்பி வந்தாலும் அவன் வேற்றுக்கோளிலிருந்து வந்த மனிதனைப்போல வேதாந்தம் பேசுகிறான்!

உணவு, உடை, உறைவிடம் மனிதனின் அடிப்படைத்தேவைகள். இவைகள் இறைவனுக்குச் சித்தமானால் விண்ணிலிருந்தும் வரமுடியும் மண்ணிலிருந்தும் பெறமுடியும்!

உழைப்பு, ஒழுக்கம், ஓய்வு சுழற்சிமுறையில் "இந்த மண்ணிலேயே வெண்ணிலாவையும் அறுவடை பண்ணலாம்!"

இதையெல்லாம் விட்டு விட்டு மனிதன் மதமயக்கங்களில் சிக்கி, மீளாத கோமாவில் இருக்கிறான் எனச்சொல்லலாம். உண்மையிலேயே,

1. ஆசிரமங்கள்! மனப்பயிற்சிக் கூடங்கள்!
2. மனமுறிவின் சின்னங்கள்!
3. பணங்களை வசூலிக்கும் நகராட்சிகள்!
4. வயதானவர்களின் சபலக் கட்டில்கள்!

யாரை நினைத்தோ சமாதியைச் சுற்றி வரும் ஒப்பாரிகளை எண்ணிப்பாருங்கள்! உலகமே ஆசிரமமானால், உழைக்காத இந்த உலகத்திற்கு உடை, உணவு, உறைவிடமேது? மயக்கத்தில் உளறுபவனுக்கும், மதமயக்கத்தில் இருப்பவனுக்கும் வித்தியாசமே இல்லை!

-Selected

**தெரிந்து கொள்ளுங்கள்**

உலகின் மிகப்பெரிய சொகுசு சுற்றுலா கப்பல் 'ராணிமேரி ஐ' இதன் நீளம் 345 மீட்டர், உயரம் 72 மீட்டர் ஆகும்.



## கழுத்து

✦ என் மகனே, உன் தகப்பன் புத்தியைக்கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும் - நீதி.1:8,9

✦ கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள் - நீதி.3:3

✦ என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும் - மத்.18:6

## இயேசுவை முன் வை
## *Put Jesus First*

*உலகம் என்னைச் சுற்றியுள்ளது இப்போ கவர்ச்சியாய் இல்லை:*
*இதன் இன்பங்கள் வேதனையைக் கொண்டு வருகிறது, இதன் ஞானம் வீணாயிருக்கிறது;*
*நான் ஒரு நிலையான, உறுதியான அடித்தளத்தை தேடுகிறேன்;*
*நான் இயேசுவை முன் வைப்பேன் என் வாழ்வில்.*

*கர்த்தர் இயேசு மரித்தார் என் இரட்சிப்பு வெற்றிபெற;*
*அவர் எனக்குப் பதிலாக கல்வாரிக்கு சென்று இரத்தம் சிந்தினார்;*
*மீட்பு என்னைத் தூண்டியது எல்லா பாவத்தையும் விட்டு விட;*
*நான் இயேசுவை முன் வைப்பேன் என் வாழ்வில்.*

**-James D.Murch**

## *ஜெபியுங்கள்*

✦ கரூர் மாவட்டத்தில் உள்ள அரங்கபாளையம் கிறிஸ்துவின் சபைக்கு சொந்தமான இடத்தில் ஆராதனை கூடம் கட்டப்பட ......

✦ தமிழகத்தில் பதினைந்து மாவட்டங்களில் வாசகர் கருத்தரங்கு நடத்த கிருபை செய்த தேவனுக்கு நன்றி சொல்லி .....

✦ கும்பகோண தீவிபத்தில் பலியான குழந்தைகளுடைய குடும்ப ஆறுதலுக்காக ......



### மருத்துவ ஆலோசனை

"நிர்மூடர் தங்கள் பாதகமார்க்கத்தாலும் தங்கள் அக்கிரமங்களாலும் நோய்கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள்" (சங்.107:18)

| ஆகாய் | பழைய ஏற்பாடு<br>புத்தகங்களுக்கு குறிப்புகள் | HAGGAI |
|---|---|---|

**பொருள்** : ஆலயத்தைத் திரும்பக் கட்டுதல்

**ஆக்கியோன்** : ஆகாய்

**காலம்** : ஏறக்குறைய கி.மு.520

**திட்டவரைக் குறிப்பு** : ★ கர்த்தருடைய அழைப்பு உயர்ந்த ஸ்தானத்திலிருந்து ஆலயத்தைக் கட்ட பொருட்களைக் கொண்டுவருவதை முக்கியத்துவப்படுத்துகிறது 1:1-15

★கர்த்தருடைய வாக்குத்தத்தமும் பெலமுமே, உற்சாகத்தைக் கொடுக்கிறது, மனிதனுடைய சாதனையல்ல 2:1-9

★ கர்த்தர் தீட்டுப்பட்டுள்ள ஜனங்கள் மனந்திரும்பும்படி எதிர்பார்க்கிறார் 2:10-19

★கர்த்தருடைய பெலம் அவர் சத்துருக்களை ஜெயிப்பார் என உறுதியளிக்கிறது 2:20-23

**சிறப்புச் செய்தி :**

"வேலையை நடத்துங்கள், நான் உங்களுடனே இருக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகிறபோது நான் உங்களோடே உடன்படிக்கை பண்ணின வார்த்தையின்படியே, என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலை கொண்டிருப்பார்; பயப்படாதேயுங்கள்".

**வரலாற்று பின்னணி :**

செருபாபேல் மற்றும் ஆகாயின்கீழ் நாடு கடத்தப்பட்டவர்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்பினபோது, ஆலயத்தைத் திரும்பக் கட்டாதபடி, புறம்பான எதிர்ப்புகளும் உள்ளான நெருக்கங்களும் அவர்களைத் தடுத்தன, எனவே ஆலயத்தைத் திரும்பக் கட்டும்படி ஆகாய் மக்களை ஊக்குவிக்கிறார்.

## பொது அறிவு சோதனை

1. மனிதனுடைய பற்கள் எந்த இரு தாது உப்புகளால் ஆனவை?
அ) கால்சியம், பாஸ்பரஸ் ஆ) மெக்னிசியம், பொட்டாசியம் இ) கால்சியம், பொட்டாசியம்

2. மரகதத்தீவு என்று அழைக்கப்படும் நாடு எது?
அ) பஹ்ரைன் ஆ) அயர்லாந்து இ) ஸ்வீடன்

3. அட்லாண்டிக் கடலில் சூரியன் உதிப்பதையும், பசிபிக் கடலில் சூரியன் மறைவதையும் எந்த நாட்டில் பார்க்கலாம்?
அ) பனாமா ஆ) அமெரிக்கா இ) ஆஸ்திரேலியா

4. உலகின் எல்லா பகுதிகளிலும் பேசப்படும் மொழி எது?
அ) தமிழ் மொழி ஆ)ஆங்கில மொழி இ) அரபி மொழி

5. மேட்டூர் அணையை கட்டிய ஆங்கிலேயர் யார்?
அ) ஸ்டான்லி ஆ) டல்கவுசி பிரபு இ) மவுண்ட்பேட்டன்

விடைகள்:
1. கால்சியம், பொட்டாசியம்
2. அயர்லாந்து
3. பனாமா
4. ஆங்கிலமொழி
5. ஸ்டான்லி

# வேத அறிவுப் போட்டி எண்-48

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும். (ஒரே நபர் இரண்டுபேருக்கு எழுதாதீர்)*

1. மாறுபாடான இருதயமுள்ளவன் எதைக் கண்டடைவதில்லை?
2. கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் என்ன செய்வார்?
3. சஞ்சலப்பட்டு முக்காடிட்டுக் கொண்டு தன் வீட்டுக்குத் தீவிரித்துப்போனவன் யார்?
4. ஏழுதரம் தும்மித் தன் கண்களைத்திறந்தவன் யார்?
5. நீ கழுகைப்போல உயரப்போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்து உன்னை என்ன செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
6. பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கிறவர் யார்?
7. கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் என்ன செய்யவேண்டும்?
8. கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் என்ன செய்யப்படுவார்கள்?
9. கடைசிகாலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் எங்கு வைக்கப்பட்டிருக்கிறது?
10. உன் ஆத்தமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் என்று யார் யாருக்கு எழுதுகிறார்?

## நடப்புச் செய்திகள்

✦ தமிழ் நாடு முழுவதும் கூரை கொட்டகை பள்ளிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கும்பகோணம் பள்ளிக்கூடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 93 குழந்தைகள் உடல் கருகி பலியான சம்பவம் நாட்டையே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது.

✦ அரசு ஊழியர்கள் வரதட்சணை வாங்க வில்லை என உறுதிமொழி கொடுக்க வேண்டும் என புதிய சட்டத்தை கேரள அரசு கொண்டு வந்துள்ளது.

✦ உலக அளவில் வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை 1981-ம் ஆண்டில் இருந்து 2001-ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலக்கட்டத்தில் 40 சதவீதத்தில் இருந்து 21 சதவீதமாக குறைந்தது.

✦ பிரான்சு நாட்டைச் சேர்ந்த அலய்ன்ராபர்ட் நகரங்களில் உள்ள வானளாவிய கட்டிடங்களில் ஏறுவதில் கில்லாடி. இதனால் "ஸ்பைடர்மேன்" என்று அழைக்கப்படுகிறார்.

✦ உலக ஜூனியர் வில்வித்தை சாம்பியன் போட்டி இங்கிலாந்தில் நடந்தது இதில் ஆண்கள் அணி பிரிவில் இந்திய அணி வெள்ளிப்பதக்கம் வென்றது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th August 2004.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.




கிறிஸ்துவின் சபை

17.2.102-D/5, ராஜன் நகர், வத்தலக்குண்டு–624 202.
திண்டுக்கல் Dt. ✆: (04543) 263278

குப்பம்மாள்பட்டி – 624 212. கொடைக்கானல் T.K., திண்டுக்கல் Dt.

7, ஆதிவீராச்சாமி நாயக்கர் சந்து, அரண்மனை தெரு, வடகரை
பெரியகுளம்–626 501, தேனி மாவட்டம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 a.m<br>7.00 a.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Wed,Thu | 2.00 p.m<br>2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue,<br>Wed, Thu,<br>Fri | 5.30 p.m<br>5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m<br>4.00 p.m | Box. 5540<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

**Monthly Magazine**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.